அண்ணன் பிறந்தநாள் ஆதலினால் இன்று ஆயிரம் கோலங்கள் போடு
இந்த மண்ணும் நிமிர்ந்த நாள் மாதவ நாள் என்று மங்கலம் சொல்லியே
பாடு
அண்ணன் பிறந்தநாள் ஆதலினால் இன்று ஆயிரம் கோலங்கள் போடு
இந்த மண்ணும் நிமிர்ந்த நாள் மாதவ நாள் என்று மங்கலம் சொல்லியே
பாடு
காலம் எம் கைகளில் தந்த மகன் குளிர் கார்த்திகை மாதத்தில் வந்த மகன்
காலம் எம் கைகளில் தந்த மகன் குளிர் கார்த்திகை மாதத்தில் வந்த மகன்
நாலு திசைகளும் தாளமிட இந்த நாடு தவம் செய்து பெற்ற மகன்
நாலு திசைகளும் தாளமிட இந்த நாடு தவம் செய்து பெற்ற மகன்

அண்ணன் பிறந்தநாள் ஆதலினால் இன்று ஆயிரம் கோலங்கள் போடு
இந்த மண்ணும் நிமிர்ந்த நாள் மாதவ நாள் என்று மங்கலம் சொல்லியே
பாடு

வெற்றி மகன் எங்கள் வீர மகன்- படும் வேதனை யாவையும் வென்ற மகன்

கொற்ற மகன் தமிழ் பெற்ற மகன்
தாயர் கொஞ்சி மகிழ்ந்திடும் கோல மகன்
பாச மகன் எங்கள் தேச மகன் பிர பாகரன் என்றிடும் ஆசை மகன்
பாச மகன் எங்கள் தேச மகன் பிர பாகரன் என்றிடும் ஆசை மகன்
தேச விடுதலை காணும் வரை அழகோடு இருந்திட போகுமகன்
தேச விடுதலை காணும் வரை அழகோடு இருந்திட போகுமகன்
விடிவுக்கான கதிராய்
எங்கள் பயிருக்கான மழையாய் கொடியில் பூக்கும் அழகாய் தமிழ் குலத்தின் வீர மகனாய்

அண்ணன் பிறந்தநாள் ஆதலினால் இன்று ஆயிரம் கோலங்கள் போடு

இந்த மண்ணும் நிமிர்ந்த நாள் மாதவ நாள் என்று மங்கலம் சொல்லியே
பாடு

ஈழத் தமிழ் நிலம் வாழ்வென ஒரு வேகம் எடுத்துமே வந்த மகன் இன்று பகைவரை வென்ற மகன் பயம் ஏதும் அறியாத வீர மகன்
வாழ வழி சொல்லும் வல்ல மகன் எங்கள் வாசல் இருக்கின்ற காவலரண்
வாழ வழி சொல்லும் வல்ல மகன் எங்கள் வாசல் இருக்கின்ற காவலரண்
நாளை தமிழரின் நாடு வரும் வரை நம்மோடிருந்திட போகுமகன்
நாளை தமிழரின் நாடு வரும் வரை நம்மோடிருந்திட போகுமகன்
விடிவுக்கான கதிராய்
எங்கள் பயிருக்கான மழையாய் கொடியில் பூக்கும் அழகாய் தமிழ் குலத்தின் வீர மகனாய்

அண்ணன் பிறந்தநாள் ஆதலினால் இன்று ஆயிரம் கோலங்கள் போடு
இந்த மண்ணும் நிமிர்ந்த நாள் மாதவ நாள் என்று மங்கலம் சொல்லியே
பாடு
அண்ணன் பிறந்தநாள் ஆதலினால் இன்று ஆயிரம் கோலங்கள் போடு
இந்த மண்ணும் நிமிர்ந்த நாள் மாதவ நாள் என்று மங்கலம் சொல்லியே
பாடு
காலம் எம் கைகளில் தந்த மகன் குளிர் கார்த்திகை மாதத்தில் வந்த மகன்
காலம் எம் கைகளில் தந்த மகன் குளிர் கார்த்திகை மாதத்தில் வந்த மகன்
நாலு திசைகளும் தாளமிட இந்த நாடு தவம் செய்து பெற்ற மகன்
நாலு திசைகளும் தாளமிட இந்த நாடு தவம் செய்து பெற்ற மகன்

அண்ணன் பிறந்தநாள் ஆதலினால் இன்று ஆயிரம் கோலங்கள் போடு
இந்த மண்ணும் நிமிர்ந்த நாள் மாதவ நாள் என்று மங்கலம் சொல்லியே பாடு